[12th March 1963

கனம் திரு. ஜி. பூவராகன் : இப்போது அரசாங்க அச்சகத்திலே உள்ளவர்களுக்கு லிபரலைஸ்ட் பென்ஷன் கொடுப்பதாக உத்தேசம் இல்லை. யார் யாருக்குக் கொடுப்பது என்று பார்த்து குமாஸ்தாக்களுக்கு மட்டும் மினிஸ்டீரியல் உத்தியோக அளவில் இருப்பவர்களுக்கு இந்தப் பென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் ஃபாக்டரி ஆக்ட்டின்கீழ் வருகிறவர்களுக்கு லிபரலைஸ் பென்ஷன் கொடுக்கவில்லை.

செங்கல் தொழிற்சாலை

* 194 கேள்வி.—**திரு. ஆ. துரை அரசன்** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரந்தாங்கி தாலூகாவில் எலக்ட்ரிக் செங்கல் தொழிற்சாலை ஆரம்பிக்குமளவிற்கு மண் கிடைப்பது அரசினருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அறந்தாங்கி தாலூகாவில் சில பகுதிகளில் ஒருவகைக் களிமண் அரசாங்க பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்களால், பரிசோதனைக்காகச் சேகரிக்கப்பட்டுள்ளது. அறந்தாங்கிக்கும், அதர்வ கோட்டைக்கும் இடையே படிந்துள்ள களிமண்ணின் அளவையும் தரத்தையும் நிர்ணயிக்கும் வேலை சீக்கிரமாக மேற்கொண்டு நடைபெறும். ஆனால் மின்சார சக்தியைக்கொண்டு கட்டிடத்திற்கான செங்கற்கள் தயாரிப்பதற்கு இந்த மண் பொறுத்தமுடையதா என்று ஆராய்ச்சி நடைபெறவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : பூந்தமல்லி, திருமிழிசை, ஆகிய இடங்களில் ஏற்படவிருக்கிற மெக்கானைஸ்டு பிரிக் பிளாண்ட் எந்தக் கட்டத்தில் இருக்கிறது ? எப்பொழுது வேலை தொடங்கும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஆ. துரை அரசன் : இதுவரையில் ஆராய்ச்சி நடைபெறவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இனிமேலாவது நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி நடத்த திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த இடத்திலே மெக்கானைஸ்டு பிரிக் யூனிட் வைப்பது சாத்தியமா, அதனுடைய காஸ்ட் ஆப் புரொடக்ஷன் என்ன ஆகும், விற்பதற்கான வழிகள் அங்கே இருக்கின்றனவா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்த பிறகு, மேற்கொண்டு பரிசீலனை நடத்தப்படும். அந்த இடத்திலே போதிய அளவு மார்க்கெட் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: இப்பொழுது கிராமங்களில்கூட செங்கல் கிடைப்பது கஷ்டமாகவும், அதிக விலையிலும் இருப்பதால், மின்சார சக்தியைக் கொண்டு இயங்கும் ஆலை ஏற்படுத்தாவிட்டாலும்கூட, தலைஞாயிறில் ஏற்படுத்திய சூளை லாபகரமாக இருப்பதால், தஞ்சையில் மேற்கொண்டும் சூளைகள் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிறிய தொழில்களை ஊக்குவிக்கும் வகையிலே, செங்கல் சூளைகள் வைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய உதவிகள் செய்து கொண்டு வருகிறது. அதைச் செய்வதற்கும் தயாராய் இருக்கிறது. மெக்கானைஸ்டு பிரிக் யூனிட் என்றால், ஒரு லட்சம் கற்கள் செய்யக்கூடிய யூனிட். கிராமங்களிலே அம்மாதிரி யூனிட் வைப்பது கட்டுபடியாகாத நிலைமை. அதனால் அதை வைப்பதற்கு முன்பு பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. சிறு சூளைகள் வைப்பதற்கு சர்க்கார் உதவி செய்யும்.

12th March 1963.]

திரு. ஆ. துரை அரசன் : அப்படிச் செய்யப்படுகின்ற செங்கற்களை அரசாங்கமே வேறு பகுதிகளுக்கு ஏற்றிச் செல்லுவதற்கு ஏற்பாடு செய்ய முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதிலே காஸ்ட் ஆப் டிரான்ஸ்போர்ட் முக்கியமான விஷயம். அறந்தாங்கியிலே கற்களைச் செய்து, சென்னைக்கோ அல்லது திருச்சிக்கோ கொண்டு போகவேண்டும் என்று சொன்னால் அதைக் கொண்டு போவதற்கான செலவு கல்லின் செலவைவிட அதிகமாகி விடும். அதனால்தான் பொருளாதார முறையிலே கட்டுபடியாகுமா என்று ஆராய்ச்சி செய்து பின்பு எந்த இடத்தில் வைப்பது என்று முடிவு செய்யவேண்டும் என்று சொன்னேன்.

திரு. ம. கமலநாதன் : சிறிய அளவிலே செங்கல் தொழிலை நடத்துவதற்கு அரசாங்கம் எவ்விதச் சலுகைகளைக் கொடுக்கிறது ? எத்தகைய மண் வளம் இருக்கவேண்டும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எத்தகைய மண் வளம் என்பதைப் பரிசீலனை செய்து, தகுதியுள்ளதா அல்லது தகுதியற்றதா என்பதை அரசாங்கம் செய்து கொடுக்கிறது. ஸாயில் டெஸ்டிங் ஸ்கீம்கள் சர்க்காரிடத்தில் இருக்கின்றன. மேலும், கூட்டுறவு சங்கங்கள் அமைத்தால், வேண்டிய நிதி வசதியும் செய்து கொடுக்கிறோம்.

நூல் விநியோகம்

* 195 கேள்வி.—**திரு. டி. கடம்பவனசுந்தரம்** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்க சர்க்கார் மேற்கொண்ட Voluntary Distribution Scheme-க்கு ஆலை முதலாளிகள் சங்கத்தார் ஒத்துழைக்கிறார்களா ?

(இ) ஆம் என்றால், எந்த அளவுக்கு ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : (அ) நமது மாநிலத்தில் தானாக மேற்கொண்டுள்ள நூல் விநியோகத் திட்டம் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் கைவிடப்பட்டது. அந்தத் தேதியிலிருந்து Textile Commissioner அகில இந்திய பருத்தி நூல் விநியோகத் திட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்துள்ளார்.

(இ) வினா எழாது.

திரு. டி. கடம்பவனசுந்தரம் : 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ம் தேதி முதல் நூல்களின் மில் வாசல் விலைகளை அதிகரித்திருக்கிறார்கள். சர்க்கார் ஆலோசனையின் பேரில் இந்த விலை கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட விலை கட்டுப்படியாகவில்லை என்று புகார்கள் வந்தன. மில்களிலிருந்து மாத்திரம் அல்ல, கூட்டுறவு நூற்பு ஆலைகளிலே கணக்குப் பார்த்தால் கூட, முன்பு நிர்ணயம் செய்த விலை கட்டுபடியாகவில்லை என்பது தெரிய வந்தது. அதன் அடிப்படையில் மத்திய சர்க்கார் விலையை மாற்றியிருக்கிறார்கள்.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Is it a fact that the prices that are being charged by the Director of Handlooms for the yarn, are more than the prices actually charged by the Mills?

The Hon. Sri R. VENKATARAMAN : It is perfectly open to the people to buy it from the mills if they can get it. The